# பேராசிரியர் அரங்க முருகையன் தலைமையில் கருத்தரங்கம்



புதுச்சேரி ஜூலை-10: புதுச்சேரி சாகித்திய அகாடமி சார்பில் பேராசிரியர் சுந்தர சண்முகனார் நூற்றாண்டு விழா கருத்தரங்கு புதுச்சேரி லாஸ்பேட்டையில் உள்ள மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்றது. எழுத்தாளர் பூபதிபெரியசாமி அனைவரையும் வரவேற்றார். கலைப்பண்பாட்டு துறை இயக்குனர் வி. கலியபெருமாள் தமிழ்மாமணி சு. வேல்முருகன் சுந்தரசண்முகனார் பற்றி எழுதிய நூலை வெளியிட பேராசிரியர் இராமானுஜம் பெற்றுக்கொண்டார். விழாவில் பேராசிரியர் அரங்க முருகையன் தலைமையில் பேராசிரியர் இலட்சுமிதத்தை பேராசிரியர் ஏழுமலை பேராசிரியர் வேல் கார்த்திகேயன் ஆகியோர் சுந்தரசண்முகனார் பற்றிய உரைகளை வழங்கினர். நிகழ்ச்சியில் பேராசிரியர் ஆனந்தன் தொகுத்து வழங்கினார்.